www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**
**Communication & Media Studies**

**Three Hours 10 min**

**Gr -12 (2023)**

**29** | **T** | **I,II**

**அறிவுறுத்தல் :-**

- **பகுதி I எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பகுதி I புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்.**
- **பகுதி II நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
- **பகுதி II ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

**பகுதி – I**

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❖ **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), 3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொடர்பாடலானது
   1) குறியீட்டுத் தன்மையானது
   2) இருவழித் தன்மையானது
   3) தொழினுட்பம் சார்ந்தது
   4) பல்திசைகளிலானது
   5) சூழலமைவு அடிப்படையானது

02. அறிவுசார் சமூகத்தினை விருத்தியடையச் செய்வதில் வரலாற்று ரீதியிலான வகிபங்கொன்று ஆற்றப்பட்டது.
   1) செய்திப் பத்திரிகையினால் ஆகும்
   2) புத்தகத்தினால் ஆகும்
   3) துண்டுப்பிரசுரத்தினால் ஆகும்
   4) சஞ்சிகையினால் ஆகும்
   5) அறிவிப்புக் காகிதத்தினால் ஆகும்

03. ஷனோன் வீவரின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடக்கப்படாதது.
   1) தடை
   2) தகவல்
   3) விளைவு
   4) மூலம்
   5) குறியீடு

04. நாட்டாரியல் முக்கியமானதொரு தொடர்பாடல் வடிவமாயிருப்பது ஏனெனில்.
   1) அது ஆட்களிடைத் தொடர்பாடல் வழிமுறையாகும்.
   2) அது பேச்சுத் தொடர்பாடல் வழிமுறையாகும்.
   3) அது படைப்பாக்க மூலமாக பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.
   4) கிராமியத் தகவல்களினை முன்வைப்பதாகும்.
   5) உள்ளூர்த் தொடல்பாடல் மாதிரியொன்றாக முன்வைக்கப்படுகிறது.

05. குறிமுறையவிழ்ப்பினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு பயன்படும் தொடர்பாடல் கூறுகளிலொன்று.
   1) தகவல்
   2) தொடர்பாடுநர்
   3) பெறுநர்
   4) அனுபவக்களம்
   5) பொருட்கோடல்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06. வெகுசன ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் உண்மையானது எது?
1) பெறுநர்களின் வகிபங்கு செயற்படுத்தன்மையானது.
2) நேரடியான பின்னூட்டம் தரப்படுகின்றது.
3) விளங்கறிவு சமநிலையில் காணப்படும்.
4) அது பல்தன்மையான ஒரு குழு ஆகும்.
5) பரந்த மகிழ்ச்சிக் களம் காணப்படாது.

07. ஊடகச் செய்திகளுக்கும் கருத்துருவாக்கத் தலைவர்களுக்கும் இடையிலான உறவு விளக்கப்படுவது.
1) அனுபவக் களம் ஆகும்
2) சமூகமயமாதல் ஆகும்
3) வாயிற்காப்பு எண்ணக்கரு ஆகும்
4) இருபடி எண்ணக்கரு ஆகும்
5) தூண்டற்பேறு கோட்பாடு ஆகும்

08. இலங்கை வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டினை சரியாக குறிப்பது.
1) 1912 2) 1925 3) 1935 4) 1975 5) 1990

09. தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒருமுறை நீக்கப்பட்டதும் அகிலா கடையை நோக்கிச் சென்றாள் அவள் தனக்கு முன்னால் பொலிஸ் அதிகாரியை கண்டதும் முகக்கவசத்தை உடனடியாக அணிந்து கொண்டாள் இந்த நடத்தைக்கு அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை.
1) வாய்மொழித் தொடர்பாடல் 2) ஆளுள் தொடர்பாடல் 3) ஆளிடைத் தொடர்பாடல்
4) காட்சி வழித் தொடர்பாடல் 5) ஆடைகள் ரீதியிலான தொடர்பாடல்

10. உலகளாவிய ரீதியில் எழுத்து அச்சுப்பதிப்பு (Letter Press Printing) முறையைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட முதலாவது புத்தகம் எது?
1) இலத்தீன் இலக்கணம் 2) இலத்தீன் வைபிள் 3) கொழும்பு ஜேர்ணல்
4) மகா சிங்கள அகராதி 5) லன்தேசி

11. கீழே தரப்படுவன நாட்டார் கதைகள் பற்றிய சில கூற்றுக்கள்.
A. அவை சமூக உணர்வைப் பிரதிநிதித்தும் செய்கின்றன.
B. அவற்றின் படைப்பு மூலம் நிச்சயமாக வெளிப்படையானது.
C. அவை பண்பாட்டை ஊடுகடத்துகின்றன.
D. அவை மூட நம்பிக்கைகளில் மாத்திரம் தங்கியிருப்பவை.
மேலுள்ளவற்றுள் உண்மையான கூற்றுக்கள்
1) A,B 2) A,C 3) B,C 4) B,D 5) C,D

12. கீழே தரப்படுவன நாட்டார் நாடகங்களினை நிகழ்த்துவதற்கான குறிக்கோள்கள் சிலவாகும்.
A. கர்ப்பிணிப் பெண்ணுக்கான சடங்காக நிகழ்த்தப் பெறுவது.
B. ஆலோசனைச் செய்தியொன்று வழங்கப் பெறுவது.
C. செழுமையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் ஒன்று.
D. பண்பாடுகளுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவது.
E. பயிர்கள் அழிவது தொடர்பில் நிகழ்த்தப் பெறுவது.
இவற்றுள் கோலம் நாடகம் பற்றி சரியானவையாக அமைவது.
1) A,B 2) A,C 3) B,C 4) B,D 5) D,E

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. கீழே தரப்படுவன தொடர்பாடலின் சில பண்புகள் ஆகும்.


**A. ஆழ்பரிவு** B. **பல்வகையான பெறுநர்கள்** C. **சுய எண்ணக்கரு**

D. **வெளிச்ச வீட்டு முறை**

மேற்குறிப்பிட்ட பண்புகள் உரித்தான தொடர்பாடல் வகைகள் முறையே

1) ஆளுள், வெகுசன, ஆட்களிடை, குழுத் தொடர்பாடல்
2) ஆளுள், ஆட்களிடை, வெகுசனத் தொடர்பாடல்
3) வெகுசன, குழுத், ஆட்களிடை, ஆளுள் தொடர்பாடல்
4) ஆட்களிடை, குழு, ஆளுள், வெகுசனத் தொடர்பாடல்
5) ஆட்களிடை, வெகுசன, ஆளுள், குழுத் தொடர்பாடல்

- கீழே தரப்பட்ட வரிப்படத்தைப் பயன்படுத்தி 14 முதல் 17 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பயன்படுத்துக.




14. தொடர்பாடல் மாதிரியொன்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களினை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது A,B மற்றும் C ஆகியவற்றை குறித்து நிற்கும் விடயங்கள் முறையே.

1) குறிமுறையாக்குபவர், குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம்
2) தொடர்பாடுநர், செய்தி, ஊடகவழி
3) குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம், தொடர்பாடுநர்
4) குறிமுறையாக்குபவர், பெறுநர், செய்தி
5) குறிமுறையாக்குபவர், செய்தி, குறிமுறையவிழ்ப்பவர்

15. மேற்படி வரைபடத்தின் படி A,B மற்றும் C ஆகியவற்றுக்கு இடையிலான செயன்முறையின் பிரகாரம்

J – நேர்வழித் தொடர்பாடல் இடம்பெறுவது காணக்கிடைக்கின்றது.

K – பின்னூட்டம் பெறப்படுவது தெளிவாகின்றது.

L – ஏதாவது இடையூறு அங்கிருப்பது தொடர்பில் உணரப்படக் கூடியதாகின்றது.

M - எவ்வாறு செய்தி புரிந்து கொள்ளப்படுகிறது என்பது புலனாகின்றது.

இவற்றுள் உண்மையான கூற்றுக்கள்.

1) J,K ஆகியன மாத்திரம்
2) K,L ஆகியன மாத்திரம்
3) L,M ஆகியன மாத்திரம்
4) J,K,L ஆகியன மாத்திரம்
5) K,L,M ஆகியன மாத்திரம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16. மேற்படி வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மிக நெருக்கமாகத் தொடர்பிலுள்ள தொடர்பாடல் மாதிரி எது?
    1) அரிஸ்டோட்டில் மற்றும் ஹரோல்ட் லாஸ்வெல்
    2) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
    3) டேவிட் பெர்லோ மற்றும் வில்பர் ஷ்ராம்
    4) குளோட் ஷெனொள் மற்றும் வோரன் வீவர்
    5) வோரன் வீவர் மற்றும் லசார் பீல்ட்

17. மேற்படி வரைபடத்தினை HUB மாதிரியுடன் ஒப்பிடும் போது கீழ்த்தரப்பட்டவற்றுள் மிக நெருக்கமான விடயம் யாது?
    1) தாக்கம்
    2) வடிகட்டிகள்
    3) குறிமுறைகள்
    4) ஒழுங்காக்கிகள்
    5) வாயிற்காப்பாண்கள்

18. தொடர்பாடல் செயன்முறைகளில் முதன் முதலில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு பற்றி கருத்துரைத்த நிபுணர்களினை சரியாகப் புலப்படுத்துவது எது?
    1) அரிஸ்டோட்டில் மற்றும் ஹரோல்ட் லாஸ்வெல்
    2) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
    3) டேவிட் பெர்லோ மற்றும் லசார் பீல்ட்
    4) குளோட் ஷெனொன் மற்றும் வோரன் வீவர்
    5) சாள்ஸ் கூலி மற்றும் வோல்ற்றர் லிப்மன்

19. இலங்கையின் தொலைக்காட்சி ஊடகத்தின் முன்னோடி மற்றும் அறிமுகப்படுத்திய ஆண்டினை குறிப்பது.
    1) ரணில் விக்கிரமசிங்க 1982
    2) ஜே. தொம்சன் 1925
    3) ஷான் விக்கிரமசிங்க 1979
    4) அனில் விஜேவர்தன 1982
    5) எம். கொலம்பகே 1972

20. மூலம் பற்றிய சிக்கலான விவரிப்பு தரப்பட்ட தொடர்பாடல் விளக்கத்தினை முன்வைப்பவர்.
    1) அரிஸ்டோட்டில்
    2) லசார் பீல்ட்
    3) டேவிட் பெர்லோ
    4) வோரன் வீவர்
    5) வில்பர் ஷ்ராம்

(20x1 = 20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

- **எவையேனும் நான்கு வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் இருபது (20) புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

01. தொடர்பாடலானது மனித உயிர் வாழ்விற்கு **அவசியமானது.**
   1) தொடர்பாடல்கற்கை அறிமுகம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோட்பாட்டாக்கங்கள் **இரண்டினையும்** அறிஞர்களினையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2) தொடர்பாடல்கற்கை அறிமுகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் **இரண்டினையும்** விபரிக்குக. (4 புள்ளிகள்)
   3) இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தொடர்பாடல்கற்கை அறிமுகம் தொடர்பில் விளக்குக. (6 புள்ளிகள்)
   4) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைக்கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

02. **“தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்”**
   1) குறிமுறையவிழ்ப்பினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு உதவிக் கொள்ளும் காரணியை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2) தொடர்பாடலில் தடை/ இடையூறின் முக்கியத்துவம் தொடர்பில் விபரிக்குக. (4 புள்ளிகள்)
   3) தொடர்பாடலின் இயல்புகள் **இரண்டினை** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)
   4) தொடர்பாடலினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் **நான்கினை** விளக்குக. (8 புள்ளிகள்)

03. 1) ஆளுள் தொடர்பாடலிற்கெனப் பயன்படுத்தப்படும் ஊடக வழிகள் **நான்கினை** பெயரிடுக. (2 புள்ளிகள்)
   2) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் **இரண்டினை** விபரிக்குக. (4 புள்ளிகள்)
   3) குழுத்தொடர்பாடல் செயன்முறையானது எவ்வாறு வெகுசனத் தொடல்பாடலில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை **மூன்று** அம்சங்களினூடாக ஆராய்க. (8 புள்ளிகள்)
   4) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் பயன்படுத்தப்படும் HUB (ஹப்) மாதிரியின் **நான்கு** கூறுகளை பெயரிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

04. 1) எழுத்துத் தொடர்பாடல் செயற்பாட்டிற்கு எடுத்துக்காட்டுக்கள் **நான்கினை** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2) தொடர்பாடல் மாதிரிகளை வகைப்படுத்தி அவை தொடர்பில் சிறு விளக்கம் தருக. (3 புள்ளிகள்)
   3) முறைசார் தொடர்பாடலுக்கும் முறைசாராத் தொடர்பாடலுக்கும் இடையிலான **மூன்று** வேறுபாடுகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)
   4) வானொலி ஊடகத்தின் படைப்பாக்க நிகழ்ச்சி வகைகள் **நான்கினை** பெயரிட்டு அவற்றுள் **இரண்டு** பற்றி விபரிக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05. 1) ஷெனொன் மற்றும் வீவருடைய தொடர்பாடல் மாதிரியின் விசேட இயல்புகள் **நான்கினை** பெயரிடுக. (2 புள்ளிகள்)

2) நாட்டார் ஊடகங்கள் மக்கள் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்தவை ஆகும். நாட்டார் ஊடக வழிமுறைகளின் இயல்புகள் **இரண்டினை** விபரிக்குக. (4 புள்ளிகள்)

3) நாட்டார் பாடல்களில் காணப்படும் விசேட அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

4) பல குரல்கள் ஒரு உலகம் (Many voices one world) எனும் மக்பிறைட் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வெகுசன ஊடகங்களின் விசேட பணிகள் **நான்கினை** குறிப்பிட்டு விளக்கம் தருக. (8 புள்ளிகள்)

06. 1) இணையவழிப் பத்திரிகைகளிற்கும் சாதாரணமாக அச்சிடப்பட்ட பத்திரிகைகளுக்கு மிடையிலான **இரண்டு** வேறுபாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

2) வானொலி ஊடகத்தின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக. (4 புள்ளிகள்)

3) ஆசியாவில் ஊடகத்துறைக்கென தனியான தடம் பதித்த நாடக இலங்கை காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையின் வெகுசன ஊடகத்துறையின் அறிமுகம் தொடர்பில் ஆராய்க. (6 புள்ளிகள்)

4) நாட்டார் கூத்துக்கள்/ நாட்டார் நாடகங்கள் தொடர்பில் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk